ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2403/16 - 2024 සැප්තැම්බර් මස 25 වැනි බදාදා - 2024.09.25

2403/16 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: WGSWD&EIP/ACQ/KB/33.
காணி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் இல.: 4-3/10/2016/LRB/67.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

*(வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் கீழ் கரதியான குப்பை மீள்சுழற்சி நிலையத்தையும் வேரஸ்கங்கையையும் அண்டியதாக அமைந்துள்ள காணித் துண்டுகளை நீர் தேங்கும் பிரதேசமொன்றாக பேணிச் செல்வதற்கும் இக் கருத்திட்டம் காரணமாக இடம்பெயர்வோரை மீள்குடியமர்த்துவதற்கும் அரசுக்கு எடுத்துக் கொள்ளல்)*

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பேவை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 576/A - தும்போவில வடக்கு கிராம அலுவலர் பிரிவில், தும்போவில கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2021.04.07 ஆந் திகதிய கடத்திரல் வரைபட இல. 521203 (தொகுதி இல. 16, தாள் இல. 5) இல் காட்டப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட காணித்துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

01. துண்டு இல. 196

காணியின் பெயர்: துனுஹிங்க கும்புர, கரதியான கும்புர மற்றும் மாவீகொட்டுவ; விபரம்: வீட்டுத் தோட்டம்; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: திருமதி சாரிகா அல்விஸ் வீரக்கொடி, திருமதி ருவணி தில்ஹாரி அல்விஸ் வீரக்கொடி,



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருமதி சமரீ உதயங்கனீ அல்விஸ் வீரக்கொடி, இல. 82, எல்ஹேன வீதி, மகரகமை; விஸ்தீரணம்: 0.3160 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இராஜகிரிய, வெலிக்கடை, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இல. 3 இல் அமைந்துள்ள இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின் காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகத்தில் என்முன் தோன்றும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். திலக்கவர்தன
காணி எடுத்தல் உத்தியோகத்தர்
வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு
மற்றும் சுற்றாடல் மேம்படுத்தல்
கருத்திட்டம்
கெஸ்பேவை பிரதேச செயலாளர்
பிரிவு,

வேரஸ்கங்க மழைநீர் வடிகாலமைப்பு மற்றும்
சுற்றாடல் மேம்படுத்தல் கருத்திட்டத்தின்
காணி எடுத்துக் கொள்ளல் அலுவலகம்,
இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்,
இல. 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
வெலிக்கடை,
இராஜகிரிய.
2024, செத்தெம்பர் 12.

EOG 09 - 0159